சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் காது கேளாத மற்றும் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டம் – 2017–2018 ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.1,76,40,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை

அரசாணை (நிலை) எண்: 1

நாள்: 17.01.2018
ஹேவிளம்பி – தை, 4
திருவள்ளுவர் ஆண்டு, 2049

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 27, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–1)த் துறை, நாள் 08.09.2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 2645/சி.ப.–2/2017, நாள் 19.07.2017 மற்றும் 31.07.2017.

STATE COMMISSIONER FOR THE DIFFERENTLY ABLED
22 JAN 2018
KAMARAJAR SALAI, CHENNAI-600 005.
LADY WILLINGDON COLLEGE CAMPUS

-----------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2016–17ஆம் நிதியாண்டில், தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் செவித் திறன் மற்றும் பார்வைத் திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.1,76,40,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2017–18ஆம் நிதியாண்டிலும் இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்திட வேண்டியுள்ளதால், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் 40 செவித் திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் 120 சிறப்பாசிரியர்கள் மற்றும் 9 பார்வைத் திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் 27 சிறப்பாசிரியர்களுக்கு ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2018 வரை மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் பன்னிரெண்டு மாதங்களுக்கென ரூ.1,76,40,000/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தாறு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, 2017–18ஆம் நிதியாண்டில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் 40 காதுகேளாதோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் 120 சிறப்பாசிரியர்கள் மற்றும் 9 பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பணிபுரியும் 27 சிறப்பாசிரியர்கள் ஆக மொத்தம் 147 சிறப்பாசிரியர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம், ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2018 வரையிலான 12 மாதங்களுக்கு ரூ.1,76,40,000/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தாறு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும் அரசு உதவி பெறும்

[த.பி.பா.]

நிறுவனங்களுக்கு மானியம் வழங்குவதற்கான நடைமுறையில் உள்ள விதிகளின்படி காலாண்டு அடிப்படையில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினைப் பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| | |
|---|---|
| "2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02– சமூகநலன் – 101– மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள்– AR–காதுகேளாதோர் பள்ளிகள் – 09–உதவித் தொகை – 03–குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை." (த.தொ.கு. 2235–02–101–AR–0932). | ரூ.1,44,00,000/– |
| "2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02– சமூகநலன் – 101– மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – AA–பார்வையற்றோர் பள்ளி – 09– உதவித் தொகை – 03–குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை." (த.தொ.கு. 2235–02–101–AA–0936). | ரூ.32,40,000/– |
| மொத்தம் | ரூ.1,76,40,000/– |

5. இவ்வாணை, நிதித் துறையின் அலுவல் சாரா எண் 62580/நிதி(சந)/2017, நாள் 10.01.2018–ல் பெறப்பட்ட இசைவின் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ..பொ.)

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழிகாக)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநில கணக்காயர், சென்னை–18/பெயரில்
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

நகல்:

நிதித் (சந) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 17/1/18
17.1.18

2017–18 ஆம் ஆண்டிற்கு சிறப்பாசிரியர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டம்
செவித்திறன் குறையுடையோருக்கான சிறப்புப்பள்ளிகள்.

| வ. எண் | சிறப்புப் பள்ளிகள் | ஆசிரியர்கள் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | கடலூர்<br>பெரிய நாயகி மார்னிங் ஸ்டார் , காதுகேளாதோர் சிறப்புப் பள்ளி, கடலூர் | 3 | 360000 |
| 2 | ஓயாசிஸ், அன்னை வேளாங்கன்னி செவித்திறன் குறையுடையோர் சிறப்புப் பள்ளி, கடலூர் | 3 | 360000 |
| 3 | ஆர். என். சுசிலா காதுகேளாதோர் சிறப்புப்பள்ளி கடலூர். | 3 | 360000 |
| 4 | கரூர்<br>அன்பாலயம் (கண்மணி டிரஸ்ட்) காதுகேளாதோர் சிறப்புப்பள்ளி, கரூர். | 3 | 360000 |
| 5 | நாகப்பட்டினம்<br>கிறிஸ்து ராஜா காதுகேளாதோருக்கான சிறப்புப்பள்ளி, சிதம்பரம், நாகப்பட்டினம் | 3 | 360000 |
| 6 | மதுரை<br>ஒய். எம்.சி.ஏ. காதுகேளாதோர் சிறப்புப்பள்ளி, மதுரை | 3 | 360000 |
| 7 | லியோனார்டு செவித்திறன் குறையுடையோர் சிறப்புப் பள்ளி, நிர்மல் நகர், விரகனூர், மதுரை | 3 | 360000 |
| 8 | தூத்துக்குடி<br>காதுகேளாதோர் சிறப்புப்பள்ளி , திருமறையூர், நாசரேத், தூத்துக்குடி. | 3 | 360000 |
| 9 | நல்லாயன் செவித்திறன் குறையுடையோர் சிறப்புப்பள்ளி, தூத்துக்குடி | 2 | 240000 |
| 10 | திருவண்ணாமலை<br>பான் செக்கர்ஸ் ( Bon Secours) காதுகேளாதோருக்கான சிறப்புப்பள்ளி , மாமண்டூர், திருவண்ணாமலை. | 3 | 360000 |
| 11 | இரங்கம்மாள் நினைவு காதுகேளாதோருக்கான சிறப்புப்பள்ளி, சம்மந்தனூர், திருவண்ணாமலை. | 3 | 360000 |
| 12 | விழுப்புரம்<br>வேலா காதுகேளாதோர் சிறப்புப் பள்ளி, விழுப்புரம் | 3 | 360000 |
| 13 | புதுக்கோட்டை<br>அறந்தை அன்னை செவித்திறன் குறைந்தோருக்கான சிறப்புப் பள்ளி, காரைக்குடி சாலை, புதுக்கோட்டை | 3 | 360000 |
| 14 | திருச்சி<br>டோலர்ஸ் காதுகேளாதோர் உயர்நிலைப்பள்ளி, பொன்மலைப்பட்டி, திருச்சி – 4 | 3 | 360000 |
| 15 | மகரிசி வித்யா மந்தர் அறக்கட்டளை, திருச்சி | 2 | 240000 |

| | | | |
|---|---|---|---|
| 16 | பெரம்பலூர்<br>ஸ்ரீ கௌதம புத்தர் செவித்திறன் மற்றும் குறையுடையோர் சிறப்புப் பள்ளி, பெரம்பலூர் | 3 | 360000 |
| 17 | கோயம்புத்தூர்<br>இந்திய செஞ்சிலுவைச்சங்கம், கோயம்புத்தூர் | 3 | 360000 |
| 18 | இன்பெண்ட் ஜீசஸ் காதுகேளாதோர் சிறப்புப் பள்ளி கோயம்புத்தூர் | 3 | 360000 |
| 19 | வேலூர்<br>லூத்ரன் காதுகேளாதோர் சிறப்புப் பள்ளி, வேலூர் | 2 | 240000 |
| 20 | ஹோலி கிராஸ் செவித்திறன் குறையுடையோர் மேல்நிலைப்பள்ளி, சத்துவாச்சாரி, வேலூர்.<br>(புனித சிலுவை செவித்திறன் குறையுடையோர் மேல்நிலைப்பள்ளி) | 3 | 360000 |
| 21 | வொர்த் டிரான்சிஸ்னல் பள்ளி, புதிய திருவலம்ரோடு, காட்பாடி, வேலூர் | 3 | 360000 |
| 22 | தருமபுரி<br>ரோட்டரி விவேகானந்தா காதுகேளாதோருக்கான உயர்நிலைப்பள்ளி, துளசிநகர், பிடமனேறி, தருமபுரி. | 3 | 360000 |
| 23 | கன்னியாகுமரி<br>அன்பு இல்லம் காதுகேளாதோர் மேல்நிலைப்பள்ளி, கன்னியாகுமரி மாவட்டம். | 3 | 360000 |
| 24 | ஓரல் காதுகேளாதோர் உயர்நிலைப்பள்ளி, நாகர்கோவில், கன்னியாகுமரி | 3 | 360000 |
| 25 | திருநெல்வேலி<br>சிவசைலம் காந்திகிராம சாந்தி காதுகேளாதோர் பள்ளி, திருநெல்வேலி | 3 | 360000 |
| 26 | பிளாரன்ஸ் சுவைன்சன் காதுகேளாதோர் சிறப்புப் பள்ளி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி | 3 | 360000 |
| 27 | சென்னை<br>சி.எஸ்.ஐ. காதுகேளாதோர் மேல்நிலைப்பள்ளி, மைலாப்பூர், சென்னை. | 3 | 360000 |
| 28 | மேரி கிளப்வாலா செவித்திறன் குறையுடையோர் உயர்நிலைப்பள்ளி, அண்ணா நகர், சென்னை – 101. | 3 | 360000 |
| 29 | புனித லூயிஸ் காதுகேளாதோர் மற்றும் பார்வையற்றோர் மேல்நிலைப்பள்ளி, சென்னை | 3 | 350161 |
| 30 | சிறுமலர் காதுகேளாதோர் மற்றும் பார்வையற்றோர் மேல்நிலைப்பள்ளி. சென்னை – 6. | 3 | 360000 |
| 31 | அரியலூர்<br>தாளாளர், ஹெலன்கெல்லர் காதுகேளாதோருக்கான சிறப்புப்பள்ளி, கெகல்லாபுரம், ஜெயங்கொண்டம். | 3 | 360000 |
| 32 | ஈரோடு<br>அபெக்ஸ், காதுகேளாதோர் சிறப்புப்பள்ளி சிலேட்டர்புரம், ஈரோடு. | 3 | 360000 |

| | | | |
|---|---|---|---|
| 33 | திருவள்ளூர்<br>மதர் தெரசா நினைவு காதுகேளாதோர் சிறப்புப் பள்ளி<br>திருவள்ளூர் | 3 | 360000 |
| 34 | அஜய் செவித்திறன் குறையுடையோர் சிறப்புப் பள்ளி,<br>திருவள்ளூர். | 3 | 360000 |
| 35 | காஞ்சிபுரம்<br>எம்.ஜி.ஆர். காதுகேளாதோர் சிறப்புப் பள்ளி, ராமாவரம்,<br>சென்னை – 89. | 3 | 360000 |
| 36 | ஜீவன் ஞானதோயா செவித் திறன்<br>குறையுடையோருக்கான உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம் | 1 | 120000 |
| 37. | விருதுநகர்<br>சி.எஸ்.ஐ. உயர்நிலைப்பள்ளி, சாட்சியாபுரம், விருதுநகர்<br>மாவட்டம். | 3 | 360000 |
| 38. | தஞ்சாவூர்<br>மாதா காது கேளாதோருக்கான உயர்நிலைப்பள்ளி,<br>சாக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம். | 3 | 360000 |
| 39 | நேஷனல் காது கேளாதோருக்கான சிறப்புப் பள்ளி,<br>கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். | 3 | 360000 |
| | மொத்தம் | 112 | 13430161 |

(ஒம்) வி. அருண்ராய்
மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர்

// ஆணைப்படி //

துணை இயக்குநர் (தி)

## 2017–18 ஆம் ஆண்டிற்கு சிறப்பாசிரியர்களுக்கு ஊதிய மானியம் வழங்கும் திட்டம் பார்வைத்திறன் குறையுடையோருக்கான சிறப்புப்பள்ளிகள்.

| வ. எண் | சிறப்புப் பள்ளிகள் | ஆசிரியர்கள் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | சிவகங்கை<br>டி.இ.எல்.சி. பார்வையற்றோருக்கான சிறப்புப்பள்ளி, திருப்பத்தூர் , சிவகங்கை | 3 | 360000 |
| 2 | திருவண்ணாமலை<br>அமலராக்கினி பார்வையற்றோர் மேல்நிலைப்பள்ளி, திருவண்ணாமலை | 3 | 360000 |
| 3 | கன்னியாகுமரி<br>சி.எஸ்.ஐ. பார்வையற்றோர் மேல்நிலைப்பள்ளி, ஐரேனிபுரம், கன்னியாகுமரி மாட்டம். | 3 | 360000 |
| 4 | திருநெல்வேலி.<br>பாளையங்கோட்டை, பார்வைற்றோர் மேல்நிலைப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டம். | 3 | 360000 |
| 5 | மதுரை<br>செயின்ட் ஜோசப் பார்வையற்றோர் சிறப்புப்பள்ளி, மதுரை | 3 | 360000 |
| 6 | சென்னை<br>புனிதலூயிஸ், காதுகேளாதோர் மற்றும் பார்வையற்றோர் மேல்நிலைப்பள்ளி, சென்னை | 3 | 360000 |
| 7. | சிறுமலர் பார்வையற்றோருக்கான மேல்நிலைப்பள்ளி, சென்னை. | 3 | 360000 |
| | மொத்தம் | 21 | 2520000 |

(ஒம்) வி. அருண்ராய்
மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர்

// ஆணைப்படி //

துணை இயக்குநர் (தி)

## சுருக்கம்

| வ. எண் | சிறப்புப் பள்ளிகள் | ஆசிரியர்கள் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | செவித்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள் | 112 | 13430161 |
| 2 | பார்வைத்திறன் குறையுடையோருக்கான சிறப்புப் பள்ளிகள். | 21 | 2520000 |
| | மொத்தம் | 133 | 15950161 |

(ஒரு கோடியே ஐம்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரத்து நூற்று அறுபத்தொரு ரூபாய் மட்டும்)

(ஒம்) வி. அருண்ராய்
மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர்

// ஆணைப்படி //

துணை இயக்குநர் (தி)